**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.154/2019**

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18–ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.07.2023 | தந்தை பெயர்: | இருளப்பன் |
| பெயர்: | பன்னீர்செல்வம்<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | செம்பதனிருப்பு | சமயம்: | |
| சாதி: | | வயது : | 64 /2023 |
| தொழில்: | | | |

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 18.07.2023.</u>

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நாங்கள் தாக்கல் செய்த ஆவணங்களின்அடிப்படையில் தான் 3-ம் பிரதிவாதியின் அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் உள்ள புல எண் தவறுதலாக உள்ளது என்பதற்கும் அதற்கான சரியான புல எண் 215/1A2 என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 18 வரையுள்ள ஆவணங்களில் எவ்வித புல எண்ணும் குறிப்பிடவில்லை என்பதால் அதன் அடிப்படையில் நான் எவ்வித பரிகாரமும்

கோர முடியாது என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு தள்ளுப்படி செய்யகூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.